

# மாற்றுக் கருத்தை ஒடுக்குதல்

## இலங்கையில் ஊடகத்துறை ஊழியர்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர்

AMNESTY INTERNATIONAL

## ‘நான் கொல்லப்பட்டால் அதன் பின்னர் நீங்கள் வழமைபோல பலவிதமாகவும் குரல்கொடுப்பீர்கள் கூச்சலிடுவீர்கள். பொலிசார் விரைவாகவும் நன்கு அலசியும் விசாரணை செய்ய வேண்டும் என்று கோருவீர்கள். ஆனால் கடந்த காலத்தில் நடந்த வேறு பல விசாரணைகளைப் போலவே அந்த விசாரணையிலும் எந்த ஒரு முடிவும் எட்டப்படாது, எந்த ஒரு பலனும் ஏற்படாது.’

**தான் கொல்லப்படுவேன் என்பதை கணித்து லசந்த விக்கிரமதுங்க தனக்குத் தானே எழுதிக்கொண்ட இறங்கல் கட்டுரை. 11 ஜனவரி 2009 அன்று சண்டே லீடர் செய்தித்தாளில் பிரசுரமாகியிருந்தது.**

இலங்கையில், உண்மைச் செய்திகளை வெளியிட்டால் உயிரிழக்கவும் நேரிடலாம். அரச படையினர், ஆயுதக் குழு உறுப்பினர்கள் என்று இருதரப்பாராலும் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், தாக்கப்பட்டும், கடத்தப்பட்டும், துன்புறுத்தப்பட்டும் உள்ளனர். 2006ஆம் ஆண்டு முதல் பார்க்கையில், இலங்கையில் குறைந்தது 15 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், 20 பேருக்கும் அதிகமானோர் நாட்டை விட்டு வெளியேறியும் இருக்கின்றனர். இப்படியான மனித உரிமை மீறல்களைச் செய்தவர்கள் எப்போதுமே சட்டபூர்வ நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதில்லை.

அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள் அல்லது மனித உரிமை ஆர்வலர்கள், தேச விரோத செயலில் ஈடுபடுகிறார்கள் என்றோ, தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஆயுதக் குழுவை ஆதரிக்கின்றனர் என்றோ அரசாங்க அதிகாரிகளால் குற்றம்சுமத்தப்படுகின்ற ஒரு பின்னனியில் இப்படிப்பட்ட தாக்குதல்கள் நடந்துவருகின்றன. எந்த விதமான விமர்சனத்தையுமே கொஞ்சமும் சகிப்புத்தன்மையின்றி காட்டத்துடன் நசுக்கும் விதமாக அரசாங்கம் நடந்துகொள்வது சர்வதேச அரங்கத்தில் அதன் நியாயபூர்வ இருத்தலுக்கு பங்கம் விளைவிக்கவே செய்கிறது. இலங்கை அரசாங்கத்தின் இப்படியான காட்டமான அறிக்கைகள் அரசாங்கத்தை விமர்சிப்பவர்ர்கள் மீது தாக்குதல்கள் நடப்பதை மறைமுகமாக ஆதரிக்கவும், சொல்லொப்போனால் சில வேளைகளில் ஊக்குவிக்கவும் செய்கிறது.

### லசந்த விக்கிரமதுங்க



© Private

சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியரும், வெளிப்படையாக இலங்கை அரசாங்கத்தை விமர்சித்து வந்தவருமான லசந்த விக்கிரமதுங்க, தான் வேலைக்குச் செல்லும் வழியில் 8 ஜனவரி 2009 அன்று சுடப்பட்டார். குண்டுக் காயங்களின் விளைவாய் சில மணி நேரங்களில் அவர் உயிரிழந்தார். தனியார் மயமாக்கல் தொடர்பான ஒப்பந்தங்களில் அரசியல்வாதிகளின் ஊழல்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலும், அரச படையினர் விடுதலைப் புலிகள் இடையிலான யுத்தத்தின்போது நடந்த மனித உரிமை மீறல்களை மக்களின் கவனத்துக்கு கொண்டுவந்ததிலும் பெயர் பெற்ற பத்திரிகை தி சண்டே லீடர் ஆகும்.

தான் கொல்லப்படலாம் என்பதை கணித்து, தான் இறப்பதற்கு சில நாட்கள் முன்பாகவே, தனக்குத் தானே இவர் ஒரு இறங்கல் கட்டுரை எழுதியிருந்தார். "ஏன் இந்த மாதிரியாக ஆபத்தை விலைக்கு வாங்குகிறீர்கள். எந்நேரத்திலும் உங்கள் கதையை முடித்துவிடுவார்கள் என்று என்னிடம் அடிக்கடி கேட்பார்கள். அது நடக்கும் என்பது எனக்குத் தெரியும். தவிர்க்க முடியாத விஷயம் அது. இப்போது நாம் வாய் மூடி பேசாமல் இருந்துவிட்டால், வாய் திறக்க முடியாதவர்களுக்காக குரல்கொடுக்க எவருமே இல்லை என்ற நிலைதான் ஏற்படும்" என்று அவர் அதில் எழுதியிருந்தார்.



© Associated Press

## யுத்த காலத்தில் ஊடகங்கள் மீதான தணிக்கை


© Private

ஜூலை 1983 முதல் மே 2009 வரையான காலகட்டத்தில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதல்கள் இலங்கையில் ஊடக சுதந்திரம் வற்றிப்போக வழிவகுத்திருந்தது. ஊடகவியலாளர்களுக்கும், ஊடகத்துறை ஊழியர்களுக்கும் (பொதுமக்களுக்குமேகூட) தகவல் அறியும் உரிமை இருப்பதை அங்கீகரிக்க இலங்கை அரசாங்கம் மறுத்து வந்துள்ளது என்று இலங்கை பத்திரிகையாளரும் மனித உரிமை ஆர்வலருமான சுனந்த தேஷப்ரிய கூறுகிறார். மோதல்கள் உக்கிரமடைந்த யுத்தத்தின் கடைசி கட்டத்தில் இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது அழுத்தம் அதிகரித்துவந்தது. 2006ஆம் ஆண்டு முதற்கொண்டே ஊடகத்துறை மீதான கட்டுப்பாடுகள் இறுகிவந்தன, ஒரு சம்பவத்தில் உயிரிழந்தவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையை ஊடகவியலாளர்கள் பிரசுரிப்பதற்குக்கூட அரசாங்கம் அனுமதி மறுத்துவந்துள்ளது.

"இலங்கையில் நீங்கள் செய்தித்தாள்களை வாசித்தால், அரசாங்கம் சொல்லும் வடிவத்திலான செய்திகள்தான் அவற்றில் இருக்கும். மிக அரிதாகவே விமர்சனக் கண்ணோட்டத்துடனான கட்டுரைகளை நீங்கள் பார்க்க முடியும்." என்றார் சுனந்த தேஷப்ரிய.

*'எல்லோருமே சுயத் தணிக்கை செய்துகொள்கின்றனர்... சில பேர் விரும்பி அதனைச் செய்கிறார்கள் ஏனெனில் (அவர்கள்) நிஜமாகவே இப்படியான அமைப்பையும் சூழலையும் ஆதரிக்கின்றனர். வேறு சிலர் விருப்பம் இன்றி அதனைச் செய்ய நேர்கிறது. இலங்கையில் ஊடக சுதந்திரம் என்பதுஇல்லை.'*

சுனந்த தேஷப்ரிய, ஊடகவியலாளர்

## தேர்தலுக்கு பின்னரான ஒடுக்குமுறை

ஜனாதிபதி தேர்தல் 26 ஜனவரி 2010 அன்று நிறைவுற்றதிலிருந்தே, விமர்சகர்களின் - அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் - குரல்களை நசுக்குகின்ற தனது வலுவான பிடியை அரசாங்கம் இறுக்கிவருகிறது. மாற்றுக் கருத்தை ஒடுக்கும் இந்தப் போக்கு அதிகமாக உள்ளது. கைது நடவடிக்கைகள், கொலை மிரட்டல்கள் போன்றவற்றை பல முக்கிய செய்தித்தாள்களின் ஆசிரியர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்; தொழிற்சங்கவாதிகள், எதிர்க்கட்சிகளை ஆதரிக்கும் அரசாங்க ஊழியர்கள் போன்றோர் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்; சுயாதீன இணைய வழி ஊடகங்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றன.

## பிரகீத் ஏக்நலிகொட



© Private

ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான பிரகீத் ஏக்நலிகொட தலைநகர் கொழும்பு அருகிலுள்ள ஹொமாகம என்ற இடத்திலிருந்து கடந்த ஜனவரி 24 ஆம் தேதி காணாமல் போயிருந்தார். லங்கா ஈ நியூஸ் பத்திரிகை அலுவலகத்தில் வேலை முடித்துக் கிளம்பிய சற்று நேரத்தில் அவர் என்ன ஆனார் என்று தெரியாமல் போனது. அந்த சமயம் அவர் வீட்டின் அருகே பதிவு எண் எழுதப்படாத வெள்ளை வேன் ஒன்றைப் பார்த்ததாக அப்பகுதிவாசிகள் கூறுகின்றனர். அன்றைய தினம் இரவு 9:30 மணிதான் அவருடன் கடைசியாக தொடர்பு கொள்ளப்பட்ட நேரம். அதன் பின்னர் அவரது செல் தொலைபேசி வேலை செய்யாமல் போனது. உறவினர்களையோ நண்பர்களையோ அவர் தொடர்பு கொள்ளவே இல்லை. தான் பின் தொடரப்படுவதாய்த் தான் உணருவதாக, காணாமல் போனதற்கு சில நாட்கள் முன்பாக, நெருங்கிய நண்பர் ஒருவரிடம் அவர் சொல்லியிருந்தார்.

பிரகீத் ஏக்நலிகொடவைக் காணவில்லை என்று அவரது மனைவி காவல்நிலையத்தில் முறையிடச் சென்றபோது, அவரும் பல மணி நேரங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். 26 ஜனவரி நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நடந்த அரசியல் நிகழ்வுகள் - எதிரணி ஆர்வலர்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்டவை குறித்து பிரகீத் ஏக்நலிகொட துடிப்புடன் செய்திகள் வழங்கிவந்துள்ளார்.

பிரகீத் ஏக்நலிகொட காணாமல் போவதென்பது இது முதல் முறை அல்ல. முன்பு 27 ஆகஸ்ட் 2009 அன்றும் வெள்ளை வேனில் வந்த ஒரு கும்பலால் இவர் கடத்தப்பட்டிருந்தார். வாகனத்துக்குள் குண்டுக் கட்டாகத் தூக்கிப்போடப்பட்டு, கண்கள் மூடப்பட்டு, கைகள் விலங்கிடப்பட்டு அவர் அடையாளம் தெரியாத ஒரு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அடுத்த நாள்தான் விடுவிக்கப்பட்டிருந்தார். இலங்கையில் பல ஆட்கடத்தல் சம்பவங்களில் வெள்ளை வேன் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக 2006 ஆம் ஆண்டு அரச அமைப்புகளும், அரசுக்கு ஆதரவான ஆயுதக் குழுக்களும் அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் மீதான தாக்குதல்களை ஆரம்பித்ததிலிருந்து வெள்ளை வேன் ஆட்கடத்தல்கள் அதிகம் எனலாம்.

## இப்போதே நீதி வேண்டும்

ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் போட்டியாளர்கள் மீதான ஒடுக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவர இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சர்வதேச பொதுமன்னிப்பு சபை கேட்டுக்கொள்கிறது. இலங்கையில் ஊடகவியலாளர்கள் மற்றும் பிற ஊடகத்துறை ஊழியர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் விசாரணை செய்யப்பட்டு சட்டபூர்வ நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை இதுவரை கேள்விப்பட்டதே இல்லை. ககூகூ0ஆம் ஆண்டு நடந்த கொலைகள் முதற்கொண்டு இதே நிலைமைதான். ஊடகவியலாளர்களை இலக்குவைத்தவர்களும் கொன்றவர்களுமேகூட சட்டத்தின் பிடியில் சிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை இலங்கையில் பல ஆண்டுகளாக இருந்துவருகிறது.

*முன்பக்கப் படம்:* சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டதைக் கண்டித்து இலங்கைத் தலைநகர் கொழும்பில் 15 ஜனவரி 2009 அன்று நடந்த துக்க அனுஷ்டானம்.
© அஸ்ஸோஸியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம்

*முந்தைய பக்கப் படம்:* 6 ஜனவரி 2009 அன்று இலங்கையின் தொலைக்காட்சி நிலையம் ஒன்றின் மீது கையெறி குண்டுத் தாக்குதல் நடந்ததைக் கண்டித்து அதே தினம் ஊடக சுதந்திர ஆர்வலர்கள் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

## நடவடிக்கை எடுங்கள்

**பின்வரும் கோரிக்கைகளுடன் இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் எழுதுங்கள்:**

- ஊடகங்கள் மீதான அளவுக்கதிகமான கட்டுப்பாடுகள், அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.
- ஊடகவியலாளர்களுக்கு எதிரான அனைத்து மனித உரிமை மீறல்களும் சுயாதீனமாக, பக்கச்சார்பின்றி, பலனளிக்கும் வகையில் விசாரிக்கப்படுவதையும், மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வதையும் உறுதிசெய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கருத்துச் சுதந்திரம், மக்கள் ஒன்று கூடுவதற்கு, சேர்ந்து செயல்படுவதற்கும் உள்ள உரிமை போன்றவற்றை இலங்கை அரசாங்கம் மதிக்கிறது என்பதை நிரூபிக்கும் விதமாக அபிப்பிராய மற்றும் கருத்து சுதந்திரத்துக்கான ஐ.நா. மன்றத்தின் விசேடப் பிரதிநிதியை தாமதமின்றி இலங்கைக்கு வரவழைக்கவும்.

**உங்களது கோரிக்கை கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

ஜனாதிபதி செயலகம்

கொழும்பு 1

இலங்கை

அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்களே என்று விளிக்கவும்

**மாற்றுக் கருத்தை ஒடுக்குதல்**

AMNESTY INTERNATIONAL

**சர்வதேச பொதுமன்னிப்பு** சபை ஓர் உலகளாவிய இயக்கம். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்வியக்கம் பரவியுள்ளது. 28 லட்சம் பேர் இதில் உறுப்பினர்களாய் உள்ளனர். மோசமான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரப் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மனித உரிமைகள் உலகப் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சர்வதேச தர அளவுகோள்களின் அடிப்படையிலான பிற உரிமைகளையும் உலக மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க இடம் ஏற்படுத்த வேண்டும் என்பது எங்கள் இலட்சியம்.

எந்த ஒரு அரசாங்கமோ, அரசியல் சித்தாந்தமோ, பொருளாதார நலனோ, மதமோ சாராத சுயாதீனமான அமைப்பு இது. இது பெருமளவில் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் பிறர் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே செயல்படுகிறது.

May 2010
Index: ASA 37/001/2010

Amnesty International
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom
www.amnesty.org